**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC No.2698/2025**

**Prosecution witness : ம.சா.2** **Date : 23.02.2026.**

| | |
|---|---|
| **Name : ராஜன்பாபு** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் சேலம் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி, ஜலகண்டாபுரம் கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். கண்ணன் என்பவருக்கு எங்கள் வங்கியில் கணக்கு எண்.211026203 என்ற எண்ணில் சேமிப்பு கணக்கு உள்ளது. கடந்த ஜனவரி மாதம் 2022 மற்றும் பிப்ரவரி மாதம் 2022 ஆகிய இரு மாதத்திற்குரிய கணக்கு பட்டியல் கொண்டு வந்துள்ளேன். கணக்கு பட்டியல் **ம.சா.ஆ.9** ஆகும்.

2) 21.01.2022ம் தேதி ரூ.3,60,000/- பணம் எடுத்தாரா என்றால் கணக்கு பட்டியலை பார்த்த வகையில் உள்ளது. லட்சுமி விலாஸ் வங்கி மூடப்படும் போது கணக்கு வைத்துள்ள நபர்களுக்கு கொடுக்கப்பட்ட காசோலைகளை திரும்ப கொண்டு வர கடிதம் அனுப்பினார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) காசோலை லட்சுமி விலாஸ் வங்கியை சேர்ந்தது என்றால் ஆமாம். காசோலை வங்கி மூடப்பட்டதால் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டதை திருப்பினோம் என்றால் ஆமாம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

4) லட்சுமி விலாஸ் வங்கியை DBS வங்கியுடன் எப்போது இணைந்தது என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். 2020 ம் வருடம் இணைந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. லட்சுமி விலாஸ் வங்கி இணையும் போது காசோலைகளை திரும்ப கொடுக்குமாறு கேட்ட பின்னர் தான் வங்கி மூடப்பட்டது என்றால் சரிதான்.

5) பழைய வங்கியின் காசோலையை வசூலுக்கு செலுத்தினால் செல்லத்தக்கது அல்ல என்றால் சரிதான். லட்சுமி விலாஸ் வங்கி காலவரம்பு மீறி தாக்கல் செய்துள்ளதால் இந்த காசோலை சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரிதான். லட்சுமி விலாஸ் வங்கி DBS வங்கியுடன் இணைந்ததால் சரியான காசோலையை தாக்கல் செய்யுமாறு காசோலை திருப்பப்பட்டது என்றால் ஆமாம்.

6) எதிரி DBS வங்கியில் தொடர்ந்து கணக்கு பராமரித்து வந்தாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2015 ம் வருடம் புகார்தாரரிடம் கொடுக்கப்பட்ட காசோலை என்றும் அதனால் தான் காசோலையை வேறு வங்கியுடன் இணைத்த போது காசோலையை திருப்பி கொடுக்கவில்லை என்றும் பின்னிட்டு காசோலையை வைத்து எதிரி மீது 2025 ம் வருடம் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலை காலவரம்பு மீறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது செல்லாத காசோலையாகும். வழக்கு பட்டியல் கண்ணன் என்பவருடைய கணக்கு பொருத்து மட்டும் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**